காஞ்சி!

நிறுவனர்: அறிஞர் - அண்ணா.

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 மார்கழி 15 (30-12-73) | இதழ்: 25

★

துன்பச் சுமையால்
துடிக்கின்ருேம் – யாம்
துயரக் கண்ணீர்
வடிக்கின்ருேம்!
அன்புப் பெரியீர்!
ஐயா நும்மை
அவனியில் என்று
காண்போமோ?

—மணிவேந்தன்

★

பகுத்தறிவுச் சிங்கம் - தமிழ் இனத் தலைவர்!!

தந்தை பெரியார் இரங்கல் மலர்

விலை: 0-25 காசு

பெரியார் மறைவு; தலைவர்களின் இரங்கல்

முதல்வர் கலைஞர்

தந்தை பெரியார் தன்னுடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார்.

95 ஆண்டுகள் வரை வாழ்ந்த அந்தப் பகுத்தறிவுச் சிங்கம் கடைசி மூச்சு வரையில் சமுதாயப் பணியை நடத்திய சரித்திரத்தை யாரும் மறுக்க முடியாது.

இன்று தமிழ்நாடு தன்மான உணர்வோடு தலைதூக்கி நிற்பதற்குக் காரணமாக இருந்த மாபெரும் தலைவர். அவரால் சமுதாய அந்தஸ்து பெற்ற லட்சோபலட்சம் பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாது.

எங்களையெல்லாம் ஆளாக்கிய எங்கள் வழிகாட்டி. இந்தப் பிரிவு பற்றி என்ன செய்வதென்றே புரியாமல் திண்டாடுகின்றேன்.

இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்த புரட்சிக்காரரை இழந்துவிட்டோம்.

அவர் தன்னுடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார்.

நாம் தொடர்வோம்.

மாண்புமிகு அமைச்சர் நாவலர்

யாருக்கும் அஞ்சாமல்-எதற்கும் அஞ்சாமல் தமிழகம் எங்கணும் வீரநடை போட்டு வந்த பகுத்தறிவுச் சிங்கம் இன்று சாய்ந்துவிட்டது என்ற செய்தி பெரும் அதிர்ச்சியையும் பெரும் துக்கத்தையும் அளிக்கின்றது.

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் சமூக சீர்திருத்தக் கிளர்ச்சிகளிலும் மொழியுரிமை போராட்த்திலும் பங்குகொண்டு அவர் புரிந்த சாதனைகள் பலவாகும்.

பொதுத் தொண்டு புரிபவர்களுக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அவர் திகழ்ந்து வந்தார்.

பொதுவாகத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாகத் தமிழக அரசுக்கும் பெருந்துணையாக இருந்து அருந்தொண்டு ஆற்றிவந்தார். அவரது இழப்பு தி. மு. கழகத்திற்கும் தி.மு. கழக ஆட்சிக்கும் பேரிழப்பாகும்.

அவர் பரப்பி வந்த பகுத்தறிவு நெறியை அறிவியலின் துணைகொண்டு தொடர்ந்து பரப்புவதில் ஈடுபடுவதுதான் நாம் அவருக்குக் காட்டக்கூடிய நன்றிக் கடனாகும்.

வளம்மிகுந்த தமிழ்நாட்டை வளரவொட்டாமல் தடுத்து வருகிற மூடப்பழக்கவழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும்—

அவர் கூறிய அறிவுரைகளின் வழிநின்று ஒழித்து—

சிறந்த தமிழகத்தைக் காண நாம் அனைவரும் ஈடுபடுவோமாக!

வாழ்க தந்தை பெரியார் புகழ்!

வெல்க அவரது பகுத்தறிவு நெறி!

பிரதமர் இந்திரா

பெரியாரது மறைவு பற்றி அறிந்து துயருற்றேன். சர்ச்சைக்குரியனவற்றில் ஈடுபாடு கொண்டு அதில் களிப்பெய்திய முனைப்பாற்றல் மிக்க மனிதர் அவர்-ஏற்றுக்கொள்ளப்பட்ட பலகருத்துக்களை எதிர்த்து அறை கூவி நின்றவர் அவர். அவருடன் சேர்ந்து பணியாற்றிய அவர் இயக்க ஊழியர்களுக்கும், அவரைப் பின்பற்றியவர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன்.

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி.

பெரியார் ராமசாமி முனைப்பாற்றல் மிக்கவராக வாழ்நாள் முழுவதும் ஒரு போராட்ட வீரராகத் திகழ்ந்தவர்

1920க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் சுதந்தரத்துக்காக நடைபெற்ற தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டார். பிற்காலத்தில் அவர் தம் கருத்துக்கேற்ப சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டார்.

அவரது மறைவுச் செய்தி அறிந்து நான் துயரமடைந்துள்ளேன்.

தமிழக ஆளுநர் கே. கே. ஷா.

சமுக சீர்திருத்தத்தில் தீவிர ஆர்வம் காட்டிய திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களது திடீர் மறைவு கேட்டு நான் பெரிதும் வருந்துகிறேன்.

தமிழக அரசு பாராட்டும் அறிவிப்பும்!

இந்திய நாட்டின் தலை சிறந்த சமுதாய சீர்திருத்த வாதியான பெரியார் திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் வேலூரில் 24—12—73 அன்று காலை 7—40 மணியளவில் இயற்கை எய்தினர் என்பதை, தமிழ் நாடு அரசு மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கின்றது. சமுதாயத் தளைகளையும் சாதி வேறுபாடுகளையும் நீக்குவதில் அவர் ஆற்றிய அரும் பணியை பெரிதும் பாராட்டுகிறது. மறைந்த தலைவருக்கு மரியாதைசெலுத்தும் முறையில் 24—12—73 அன்று துக்க நாளாக அனுசரிக்கப்படுமென்றும், பொது விடுமுறை என்றும் அரசு அறிவித்தது.

*

காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 30—12—73 | இதழ் 25

மாமலை சாய்ந்தது!

தமிழ், தமிழ்இனம், தமிழ்நாடு, திராவிடப் பண்பாடு ஆகியவற்றுக்கெல்லாம் அரணாக இருந்த 'மாமலை' சாய்ந்து விட்டது!

சமயக் கொடுமை, சாதிப் பாகுபாடு, மூடநம்பிக்கை, கண்மூடிப் பழக்க வழக்கங்கள் எல்லாம் மண்மூடிப் போகவேண்டும் என முழங்கிய 'சங்கநாதம்' ஓய்ந்து விட்டது.

அறியாமை—புரியாமை—தெரியாமை—தெளியாமை இருள் நீங்கத் தினம்வந்து ஒளி கொடுத்த 'பகுத்தறிவுப் பகலவனின்' நெடும் பயணம் 'திடும்' என நின்று விட்டது.

அஞ்சாமை—அறிவுடைமை — துஞ்சாமை—துணிவுடைமை ஆகியவற்றின் மொத்த உருவாக உலாவந்த 'சுயமரியாதைச் சிங்கத்தின்' ஓங்காரக் கர்ச்சனை ஓய்ந்துவிட்டது.

'கொடு, தலை'யை என்றாலும் அஞ்சேன்; கெடுதலையே செய்தாலும் துஞ்சேன்; 'விடுதலை'யே என்றனது உயிர்மூச்சு என வீறு கொண்டு பாய்ந்திட்ட 'தமிழ் இன வேங்கை,' அந்தோ! மாய்ந்து விட்டது!

இருட்டு உலகத்தை விரட்டி அடித்து, குருட்டு நம்பிக்கையின் குரள்வளையை நெரித்து, திருட்டு இனத்தவரின் 'தகிடுதத்தங்களை'த் தகர்த்தெறிந்து, வரட்டுத் தத்துவங்களைச் சுட்டுப் பொசுக்கி தமிழரைத் தமிழராக வாழ வைத்த தடந்தோள் மறவர்—

ஆரியரின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி, கூரிய மதியினராக, கொள்கை அரிமாக்களாகத் தமிழ் இளைஞர் பட்டாளத்தை உருவாக்கிய பெருமைக்குரிய தமிழ் இனத் தலைவர்—

கோத்திரம் பார்க்கும் குணங்கெட்ட செயலை, சாத்திரம் பேசும் சண்டாளத்தனத்தை, 'சூத்திரன்' என ஒதுக்கி சொந்த இனத்தை வளர்க்கும் சூட்சமத்தை எல்லாம் சுக்குநூறாக்கி தமிழர்தம் மானத்தைக் காத்திட்ட தன்மான இயக்கத்தின் முன்னோடி—

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சமுதாய சீர்திருத்தச் சிற்பி—தந்தை பெரியார் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டுத் தவிக்கின்றோம்—தணல் வீழ் புழுவாகத் துடிக்கின்றோம்.

நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது!

'ஐயா'வை இழந்த ஆறாத் துயரினைத் தாங்க முடியாமல் அரற்றுகின்றோம்; அலமறுகின்றோம்.

கண்கள் குளமாகின்றன;

கண்ணீர் அருவியாகின்றது!

"இந்த அமைச்சரவையே தந்தை பெரியாருக்குக் காணிக்கையாக்குகின்றேன்" என்றார் **பேரறிஞர் அண்ணா**. காணிக்கை நல்கிய அண்ணனை அன்று இழந்து தவித்தோம்!

காணிக்கையினை ஏற்ற 'ஐயா'வை இன்று இழந்து தவிக்கின்றோம்.

"இந்தியாவின் தலைசிறந்த சீர்திருத்த புரட்சிக்காரரை இழந்துவிட்டோம்; அவர் தன்னுடைய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம்!! என்று கழகத்தலைவர் **கலைஞர்** அவர்கள் கூறியுள்ளதற்கிணங்க, ஐயா அவர்களின் இலட்சியத்தைத் தொடர்ந்து நிறைவேற்றும் பணியில் நம்மை நாமே ஈடுபடுத்திக் கொள்வோம்.

அதுதான் ஐயா அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்,

—மணிவேந்தன்.

"பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல, ஒரு சகாப்தம், ஒரு கால கட்டம், ஒரு திருப்பம் என்று கூறுவது வாடிக்கை.

அவர் கண்ட களம் பல, பெற்ற வெற்றிகள், பலப்பல, அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது.,

—அறிஞர் அண்ணா

எவர் பெரியார்? அவர் வாழ்க!

(பாவேந்தர் பாரதிதாசன்)

குமரி நாட்டின் தமிழ்நான் மறைகள்
அமிழ்ந்தன! வடவர் மறைகள் நிமிர்ந்தன!
தமிழன் முதலில் உலகினுக் களித்த
அமிழ்துநேர் தத்துவம் ஆன எண்ணூல்
அமிழ்ந்தது! வடவரின் அறிவுக் கொவ்வாப்
பொய்ம்மை மெய்ம்மை ஆகிப் பொலிந்தன
அகத்தியன் தொல்காப் பியன்முத லானவர்
தகுதிறம் தமிழிற் பெறுதிறம் அருளிய
எண்ணருங் கண்ணிகர் தமிழ்ப்பாடும் ஏடுகள்
மறைந்தன! வடவர் தீயொழுக்க நூற்கள்
நிறைந்தன! இந்த நெடும்புகழ் நாட்டில்
“தீதுசெய் யற்க செய்யில் வருந்தி
ஏதும் இனியும் செய்யற்க” வெனும்
விழுமிய தமிழர் மேன்மை நெஞ்செலாம்
கழுவாய் எனுமொரு வழுவே நிறைந்தது
“நல்குதல் வேள்வி” என்பது நலியக்
கொல்வது வேள்வி எனும் நிலை குவிந்ததே
ஒருவனுக் கொருத்தி எனும் ‘அகம்’ ஒழிய
ஐவருக் கொருத்தி எனும் அயல் நாட்டுக்
குச்சுக் காரிக்குக் கோயிலும் கட்டி
மெச்சிக் கும்பிடும் நிலையும் மேவிற்று
மக்கள் நிகர்எனும் மாத்தமிழ் நாட்டில்
மக்களின் வேற்றுமை வாய்க்கவும் ஆனதே
உயர்ந்தவன் நான்என் றுரைத்தான் பார்ப்பான்
அயர்ந்தவன் நான்என் றுரைத்தான் தமிழன்
இப்படி ஒருநிலை காணுகின் றோமே
இப்படி எங்குண் டிந்த உலகில்?
இறந்த காலத் தொடக்கத் திருந்து
சிறந்த வாழ்வுகொள் செந்தமிழ் நாடிவ்
விழிநிலை நோக்கி இறங்குந் தோறும்
பழிநீக் கிடஎவன் பறந்தான் இதுவரை?
இதுவரை எந்தத் தமிழன் இதற்கெலாம்
பரிந்து போராடினன் எண்ணிப் பார்ப்பீர்
தமிழன் மானம் தவிடுபொடி ஆகையில்
வாழாது வாழ்ந்தவன் வடுச்சுமந்து சாகையில்
ஆ’ என்று துள்ளி மார்பு தட்டிச்
சாவென்று வாழ்வொன்று பார்ப்பேன் என்று
பார்ப்பனக் கோட்டையை நோக்கிப் பாயும் இவ்
வருஞ்செயல் செய் வார் அல்லால்
பெரியார் எவர்? நம் பெரியார் வாழ்கவே!

[மலேயாவில் வெளியிட்ட பெரியார் 79-ம் ஆண்டு சிறப்பு மலரில் எழுதியது.]

அறிவுப் பூ உதிர்ந்துவிட்டது!

கருமலைப்பழம்நீ

★

ஆடும் மயிலே! ஆட்டம் நிறுத்து!
பாடும் குயிலே! பாட்டை நிறுத்து!
சந்தனக் காடு சாய்ந்து விட்டது!
சரித்திரக் கோட்டை சரிந்து விட்டது!
அகிலமே விரும்பி மணம் நுகர்ந்த
அறிவுப் பூ! உதிர்ந்து விட்டது!

அடிமைப் பூட்டை உடைத் தெறிந்து
மடமைக்கும் சாதிக்கும் தீயிட்டுச்
சீர்த்திருத்தம் விளைவித்த
ஈ ரோட்டுச் சிங்கம் சாய்ந்து விட்டது!

ஓ! காலமே! என்னே! நின் கோலமே!

ஆரியப் பேய்களை விரட்டி யோட்டி;
அறிவுச் செல்வத்தை வளர்த்து;
தமிழனே அரசாளும் வழி வகுத்து;
தமிழ் மக்கள் ஒற்றுமைக்கும்;
தமிழ் மக்கள் உயர்பதவியேற்பதற்கும்;
தம் வாழ்வை அற்பணித்த

அறிவுச்சுடர்! அணைந்து விட்டது!

கடவுள் பெயரால் காசு பறிக்கும்
கயவர்தம் போக்கை இடித்துரைத்து;
கட்டுக்கதை கடவுள் கதை; கடவுளைக்
கற்பித்தவன் முட்டாள்; என்ற
தெளிந்த நீரோடை போன்ற கருத்துகளைப்
பறைச்சாற்றி— உறுதியான
கொள்கை கொண்டு—அரசியல் என்ற
சகதியிலே வீழாமல்—தனி நின்று
பகுத்தறிவுப் பாசறை அமைத்து
பகலிரவாய் ஓய்வின்றி
பயணம் சென்று—சிந்தனைச் சொற் போராற்றி
‘பெரியார்’ எனும் தனிச்சிறப்புப் பெற்ற-அந்தச்

சீர்த்திருத்த தமிழ்ச் சிங்கம்
நீடுதுயில் கொண்டு விட்டது!

ஆடும்மயிலே! ஆட்டம் நிறுத்து!
பாடும் குயிலே! பாட்டை நிறுத்து!

94-வது பிறந்த நாள்

[தந்தை பெரியார்]

எனக்கு (நான் பிறந்து) நாளது செப்டம்பர் மாதம் 17-ம் தேதியோடு, 93 ஆண்டு முடிவடைந்து, 94-ம் ஆண்டு முதல் நாள் தோன்றிவிட்டது.

93 ஆண்டு என்றால், நான் பிறந்து, மாதங்களில் 1116 மாதங்கள், நாட்களில் 34045 நாள்கள்; பிறைகளில், (அமாவாசைகளும்) 1635 ஏற்பட்டு மறைந்து விட்டன.

இனிமேலும் எத்தனை காலத்துக்கு வாழ்ந்தாலும், வாழ்வில் தேய்மானம்தான் காணமுடியுமே ஒழிய வளர்ச்சி காண்பது என்பது (இயற்கையில்) முடியாத காரியமேயாகும்.

என் வாழ்நாளில் நான், மற்றவர் (அனேகர்) கடவுள், மதம், சாஸ்த்திரம், முன்னோர்கள் கருத்து என்பவைகளில், யாரும் நினைக்காததும், நினைத்தாலும் வெளியில் சொல்லப் பயப்படுவதும்; துணிந்து சொன்னாலும் செயற்கையில் நடவாததும், நடத்திக் காட்டமுடியாததுமான காரியத்தை எளிதாய் நினைத்து, வெளியில் எடுத்துச் சொல்லி (பிரசாரம் செய்து) காரியத்திலும் நடந்துவந்ததோடு, ஒரு அளவுக்கு மற்றவர்களுக்கும் தெரியும்படி-விளங்கும்படி, ஒரளவுக்கு நடத்திக்காட்டியும் வந்திருக்கிறேன்.

இந்த நிலை உலகெல்லாம் பரவவேண்டும் என்ற எண்ணம் கொண்டு, அதற்காக வாழ்கிறேன், என்ற எண்ணத்தில் இருந்து வருகிறேன்.

அப்படிப்பட்ட காரியம் (எண்ணம்) என்னவென்றால்; தெய்வம் இல்லை; தெய்வ சக்தி என்பதாக எதுவும் இல்லை, மனிதத்தன்மைக்கு மேற்பட்ட தெய்வ சக்தி—தெய்வீகத் தன்மை என்பதாக எதுவுமில்லை; அப்படிப்பட்ட தெய்வீகத்தனம் கொண்டவர்கள் என்பதாக யாருமே இல்லை; அப்படிப்பட்ட காரியம் என்பதாகவும் எதுவுமே இல்லை என்றும் திண்ணமாய்க் கருதி, உறுதியான பணியாற்றியும் வந்திருக்கிறேன்—வருகிறேன்.

இந்த எனது நிலையால், எனது 93 ஆண்டு வாழ்நாளில் எனக்கு யாதொரு குறைவும் சங்கடமும், மனக் குறைவோ, அதிருப்தியோ கூட ஏற்பட்டதேயில்லை.

மேற்கண்ட எல்லா காரியங்களிலும், மற்றவர்கள் எளிதில் பெறமுடியாத அநேக ஏற்றங்களை சாதாரணமாகப் பெற்றிருக்கிறேன்; மக்களால் நல்ல அளவுக்கு மதிக்கப்பட்டும், பாராட்டப்பட்டும், விரும்பப்பட்டும், போற்றப்பட்டும் வந்திருக்கிறேன்.

இதனால் உலகுக்கு—மக்களுக்கு யாதொரு கெடுதியும் ஏற்பட்டதில்லை என்பதோடு நாட்டுக்கும் மக்களுக்கும்; பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்படுத்தப்பட்ட மக்கள் யாவருக்குமே நல்ல வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டு வருகின்றன என்றே சொல்லலாம்.

நமது கருத்து வெளியீடும், பிரசாரமும் துவக்கப்பட்ட காலத்தில், நமது மக்களின் சராசரி ஆயுள் (வாழ்நாள்) பத்து ஆண்டேயாகும். கல்வியில் நமது மக்கள் 100-க்கு 8 பேர்; 10 பேர் என எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆவார்கள். ஏராளமான நோய் நலிவுகள்—அவற்றுள் பரிகாரம்; சவுக்கியம் செய்யமுடியாத நோய்கள் அதிகம். காலரா (வாந்திபேதி) வந்தால் 100-க்கு 90 பேர் சாவார்கள்; பிளேக் வந்தால் 100-க்கு 100-ம் சாவார்கள்; இருமல்:(க்ஷயம்) வந்தால் 100-க்கு 80 பேர் சாவார்கள்; அம்மை (வைசூரி) வந்தால் 100-க்கு 50 பேர்களுக்குமேல் சாவார்கள். தொத்து நோய்களும் பல—குழந்தைச் சாவுகளும் ஏராளம். கர்ப்பஸ்திரீகள் சாவுகளும் ஏராளம் இருந்தன.

இதற்கு ஏற்ப ஏழ்மையும், கீழ்த்தரமான வாழ்க்கை நிலையும் இருந்து வந்தன.

அரசியலில் அந்நிய ஆதிக்கம்; பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடின.

அதுபோலவே உத்தியோகத் துறையிலும் பார்ப்பன மயமும், முன்னேற்ற வகுப்பார் ஆதிக்கமும் இருந்துவந்தன. முதலாளிகள் ஆதிக்கமும், எஜமான்—அடிமைத்தன்மையும் இயற்கை என்று சொல்லும் தன்மையில் தாண்டவமாடின.

செல்வ நிலையோ, ஒரு லட்சம் என்பதுதான் உயர்ந்தநிலை. 10 லட்சம் என்பது மிக மிக உயர்ந்த நிலையாய் இருந்தது. மற்றும் எவ்வளவோ கீழ் நிலைக்கு ஆளாகியிருந்தது மாத்திரமல்லாமல், இந் நிலைபற்றி வெட்கப்படாமலும் கவலைப்படாமலும் வாழ்ந்து வந்தோம். இப்படிப்பட்ட நிலையில், இந்த நிலைப்பற்றி யாருமே கவலைப்படாமல்—இவற்றின் விளைவுபற்றி யாருமே கவலைப்படாமல், “எல்லாம் கடவுள் செயல், நம்மாலாவது ஒன்றுமே இல்லை”—என்று கருதி, நிம்மதியுடன் மக்கள் இருந்த காலத்தில். நான் ஒருவன் மாத்திரமே தீவிரமாய் சிந்தித்து, இந்த நிலைக்குக் காரணம் நமது முட்டாள்தனமும் இதுவரை சிந்திக்காததுமேதான் என்று கருதி, துணிந்து கடவுளையும் மதத்தையும் சாஸ்திரங்களையும் முன்னோர் கூற்றையும் அழித்து. ஒழித்துக்கட்டி, மக்களுக்கு புது எண்ணங்களை; அறிவை உண்டாக்க வேண்டும் என்று பாடுபட்டு வந்ததே இம்மாற்றங்களுக்கு வழியேற்படக் காரணமாயிற்று.

கடவுள், மத, சாஸ்த்திர முன்னோர் கூற்று ஆகியவைகளை எதிர்க்கவும் அழிக்கவும் அவை ஒழிக்கப்படவும் துணிவு எனக்கு எப்போது, ஏன் வந்தது; எப்படி வந்தது என்றால் மேற்கண்ட அவை எல்லாம் மனித சமுதாயத்தின் காட்டுமிராண்டிக் காலமான சுமார் 2000—3000 ஆண்டுகளுக்கு முந்தின மிருகப் பிராயத்தில் ஏற்பட்டவைகளே; அக்காலம் அறிவில்லாத காலம் என்பது மாத்திரம் அல்லாமல், தாய், மகன், தந்தை, மகள், அண்ணன்

தங்கை என்பவைகளான முறைப் பேதங்கள் இல்லாத காலம். அவை மாத்திரமா? பகுத்தறிவு, சிந்தனை அற்ற காலம். வளர்ச்சி என்பதாக ஒரு தன்மை இருக்கிறது என்பதே தெரியாத காலம்.

சாதாரணமாகக் கந்தபுராணம், வாயுபுராணம், பாரத புராணம், இராமாயண புராணம் முதலிய கடவுள் சம்பந்தமான, மத சம்பந்தமான, சாஸ்திர சம்பந்தமான, சாஸ்திர புராண இதிகாசங்களையும், சிவ புராணம், விஷ்ணு புராணம், பாகவதம்; வெகு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட பக்த விஜயம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலிய ஆதாரங்களையும், இலக்கியங்களையும் பார்த்தாலே நல்ல வண்ணம் உண்மை விளங்கும்.

மற்றும் இந்த மடமைக் கூளங்களை இன்றைய தினத்திலேயே நம்மில், 100-க்கு 90-க்கு மேற்பட்ட மக்கள், அதிலும் புலவர், பண்டிதர், வித்துவான் மகா மகோபாத்தியாய! பி.ஏ. எம்.ஏ., டாக்டர் பட்டங்கள் பெற்ற பெரிய படிப்பாளி அறிவாளிகள் என்பவர்களான எல்லாம்கூட நம்பி, அதன்படி நடக்கத் துணிந்தவர்களும் இருக்கிறார்கள் என்றால், பக்தி என்றுலே, இந்தக் காட்டுமிராண்டிக் காலத்திய கற்பனையை நம்புவதும், நடிப்பதும் அதற்கேற்ப கோயில், குளம், உற்சவம், பண்டிகைகள் ஆகியவைகளை ஏற்படுத்தி பரப்பி, கொண்டாடி வந்தனர் என்றால், அறிவிலிகள் எவ்வளவு மோசமாக, கற்பனையற்றவர்களாக, காட்டு மிராண்டிகளாக இருந்திருக்கமாட்டார்கள்? அவ்வளவு ஏன்?

கிரகணங்களை நம்புகிறவர்கள் எத்தனை இன்று கூட சாதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் இந்தியாவுக்கு அப்பால் உலகம் இருப்பதாகவே தெரியாதோர்எத்தனை?-இன்றைக்கு 150,200-300 ஆண்டுகளுக்கு முன் நம் நிலை என்ன என்று பார்ப்போமானால்—நெருப்புக்குச்சி ஏது? ரயில், கார், கப்பல் ஆகாயக்கப்பல் ஏது? நடக்க நல்ல பாதை ஏது?

இந்த நிலைமையில் உள்ள மக்களின் மூட— காட்டுமிராண்டி நம்பிக்கையான—அதன் தோற்றங்களான கடவுள், மதம் சாஸ்திரம், பெரியோர் கருத்து என்பவைகளை ஒழிக்க ஒரு மனிதன் துணிவு கொள்ளுவானுனல், அத்துணிவில் அதிசயம் ஏது? —எப்படியிருக்க முடியும்?

பகுத்தறிவுள்ள மனிதனுக இருந்து கொண்டு, கடவுள் மதம் சாஸ்திரம் பெரியோர் கருத்து என்பனவைகளை நம்புவதும்; அழிக்காமல், ஒழிக்காமல் இருப்பதும் பின்பற்றுவதும்தான் முட்டாள் தனமான துணிவுகொண்ட தன்மையாகும் என்று சொல்லலாம்.

நிற்க, மேலே கண்ட எனது துணிவான கருத்துக்களால், பிரசாரத்தால், இவ்வைம்பது ஆண்டு நடப்பால் நம் நாட்டாருக்கு, மனித சமுதாயத்துக்கு ஏற்பட்ட தீமை என்ன?—கேடு என்ன? என்று பார்த்தால்; ஒரு சாதாரண மனிதனுக்கும், அவன் கடுகளவு சிந்தனையாளனுக இருந்தால், கேடு ஒன்றும் ஏற்படவில்லை என்பதோடு மேலே காட்டப்பட்ட அனேக நன்மைகள் ஏற்பட்டிருப்பது தெரியாமல் போகாதே. அது மாத்திரமா? இந்தக் கடவுள், மதம், சாஸ்த்திரம் முன்னோர் கருத்து என்பவைகளால் நாட்டுக்கு—மனித சமுதாயத்திற்கு ஏற்பட்ட கேடுகளும், வளர்ச்சித் தடைகளும் எப்படிப்பட்ட மூடனுக்கும் புரியாமல் போகாது

எனவே நான், 93 ஆண்டு வாழ்ந்ததை வீண் வாழ்வு என்று கருதவில்லை—என் பணிகளை வீண் பணி என்றும் கருதவில்லை.

இனிமேலும் வாழ்வதைத்தான் கஷ்டமாகக் கருதுகிறேன். என் உடல் நிலைமை மிக மோசமாகி விட்டது. நினைவு சரியாக இல்லை. மறதி அதிகம்—கண், காது சரியாக இல்லை. கால்கள் நடக்கவே முடிவதில்லை, அசதி அதிகம், இப்படிப்பட்ட நிலையிலும், சற்று மகிழ்ச்சி, சிறிது உற்சாகம் கொள்ளுகிறேன் என்றால், இன்று நமக்கு வாய்திருக்கும் தி. மு. க. ஆட்சிப் பணிகளால்தான்.

காரணம் என்னவென்றால், இதன் முன்னர் இருந்த ஆட்சியின் யோக்கியத்தைகளை, அவைகளால் நாட்டுக்கு—சமுதாயத்திற்கு ஏற்பட்ட கேடுகளை ஒழித்துக் கட்டாததால் சமுதாய விஷயத்தில்; ஜாதி அமைப்பு விஷயத்தில், கல்வி விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள்; என்ன கொள்கை மேற்கொண்டார்கள் என்பவைகளை சிந்தித்தால் தெரியவரும்.

ஏதாவது பொல்லாத வாய்ப்பால் இப்போதைய இந்த தி. மு. க. ஆட்சிக்கு ஏதாவது மாறுதல் காலம் ஏற்பட்டால், வேறு எந்த ஆட்சி வரும்; அதன் பலன் என்ன ஆகும் என்பவைகளை சிந்தித்தால் பெரும் பயம் ஏற்படுகிறது.

மற்றபடி மகிழ்ச்சியோடு இதை முடிக்கிறேன்.

"உண்மை" பகுத்தறிவு மாத இதழ்
(14-9-73)

தாம்பூலத்திற்குச் சிறந்தது

அந்த வசந்தம்

எனக்கென்று ஒரு 'வசந்த காலம்' இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு—அந்த 'வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழ முடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன்.

பெரியாருக்கு, அந்த 'வசந்த காலமும்' தெரியும் இன்று நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

'வசந்த காலம்' என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் 'காடு மேடு பல சுற்றிவந்த நிலை. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன், நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது 'கலவரம் எழாமல் ஒரு பொதுக் கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்திட முடிந்தால் போதும்—பெரிய வெற்றி என்ற பெருமிதம் தோன்றும்.

புறப்படு முன்னர், தலை போகும், தாடி போகும், தடி போகும், உயிர் போகும் என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.

அண்ணுத்துரை! இதைப் பார்த்தாயா என்று ஒரு கடிதத்தை வீசுவார்—ஆமாமய்யா! என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிருயா என்று என்னை கேட்கமாட்டார். வருவேன் என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால் செல்வோம். பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில் உருட்டல், மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின் அடுத்த கூட்டத்துக்கு அவர் ஐயாவுக்காக 'மாலை' வாங்கிக் கொண்டுதான் வருவார்; அத்தகைய தெளிவும் வாதத் திறமையும் பேச்சில் கிடைக்கும்.

அத்தகைய தெளிவுரை பெற்று பெற்று தமிழரில் பலர், பலப்பலர், திருந்தினர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

ஒருவர் புறப்பட்டு, ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை.

அந்த 'வரலாறு' துவக்கப்பட்டபோது நான் சிறுவன்.

அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றி இருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் 'வசந்தம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர் அவருடன் மற்றப்பலரை விட இடைவிடாது இருந்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்னும் நினைவிலே கொண்டு வரும்போது இனிமை பெறுகின்றேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிருர்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்று வரும் வாய்ப்பும் தந்தார்.

பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், ஆகமகிழ்வும் மனநிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன், கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன். உன்னை எனக்குத் தெரியும்போ! என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஒரு நாள் கூட என்னிடம் அவர் அவ்விதம் நடந்துகொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று, தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாப் பிள்ளை எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் — கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான்—

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார். நான் அவருடன் இணைந்தபோது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு—

அதற்கு முன்பு முப்பதாண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிருர்.

இந்த "ஆண்டுகள்" தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்.

திடுக்கிட வைக்கிருரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிருரே! ஏதேதோ சொல்கிருரே!—என்று கூறியும் விட்டுவைக்கக்கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்! என்று மிரட்டியும் தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர், ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர். மறுப்பு உரைத்தனர். ஆனுல் அவர் பேச்சை கேட்டவண்ணம் இருந்தனர்! மூலையில் நின்ருகிலும் மறைந்தாகிலும்! அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது! எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள்

ஐய்யாவைப்பற்றி அண்ணுவின் கருத்தோவியம்

ஏனோ தானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர். கொதித்தவர்கள் அடங்கினர். மிரட்டினோர் பணிந்தனர். அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர். அவருடைய பேச்சோ! அது தங்கு தடையின்றி, வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது. மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடுகளை கழனி வளம் பெறச் செய்துகொண்டு, ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார்! இங்கே பேசுகிறார்! அதைக் குறித்துப் பேசுகிறார். இதைக் குறித்துப் பேசுகிறார் என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறிவருகிறது.

மனதிற் பட்டதை எடுத்துச் சொல்கிறேன். எது நேரிடினும்—என்ற உரிமைப்போர், அவருடைய வாழ்வு முழுவதும், அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின் விளைவுகளை இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல் கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை, இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது. பிற பகுதியினர் இது பற்றிக் கேள்விப்படும் போது வியந்துப் போகின்றனர்! அப்படியா!—முடிகிறதா—நடக்கிறதா? விட்டுவைத்திருக்கிறார்களா! —என்று கேட்கிறார்கள் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு,

அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ், மேலும் இதுபோன்ற பல நகர்களில் என்னையும் உடன் அழைத்துக்கொண்டு பெரியார் சுற்றுப் பயணம் செய்தபோது, ஒவ்வொரு ஊரிலும் இதுபோலத் தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவு வாதிகள்!!

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள்—பெரிய பெரிய ஏடுகளை எழுதுவார்கள்! அழகழகான கட்டுரைகளை! கூடிப் பேசுவார்கள்! சிறிய மண்டபங்களில்; போலீஸ் பாதுகாப்பு பெற்றுக் கொண்டு! இங்கு? இங்கா! அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார். எதற்கு அவர் பணிந்தார். எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பொறுத்தது! ஏ! அப்பா! ஒரே ஒருவர் அவர் நம்மை அச்சு வேறு ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே, என்று இந்நாட்டை என்றென்றும் விடப் போவதில்லை என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த 'பழமை' அலறலாயிற்று! புதுப் புதுப் பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும், இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், விழுந்த அடியாக, அடித்தளம் நொறுங்கிபோய் விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இல்லை.

எனவேதான், பெரியாருடைய பெரும்பணியை, நான் ஒரு தனி மனிதரின் வரலாறு என்றல்ல.

ஒரு சகாப்தம் — ஒரு காலக் கட்டம்

—ஒரு திருப்பம் என்று கூறுவது வாடிக்கை.

அக்ரமம் தென்படும்போது மிகப் பலருக்கு, அது தன்னைத் தாக்காதபடி, தடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும்; ஒதுங்கிக்கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியுந்தான் தோன்றும். எதிர்த்து நிற்கவேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார், அக்ரமம் எங்கு இருந்திடக் கண்டாலும் எந்த அளவில் வடிவிலே காணப்படினும், எத்தனை பக்கபலத்துடன் வந்திடினும்; அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை!

அவர் கண்ட களம் பல! பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது! அவர் வயது 89! ஆனால் போர்க்களத்திலே தான் நிற்கிறார்!

அந்தப் போரில், ஒரு கட்டத்தில் அவருடன் இருக்கும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்முடன், நமக்காக, வாழ்ந்திருக்க வேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்கு! பன்னெடுங் காலமாக இருந்துவரும் கேடுகள் களையப்படுவதற்கு அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் என்பதில் ஐயமில்லை! வாழ்க பெரியார்!

[பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியார் 89-வது ஆண்டு 'விடுதலை மலருக்கு' தந்த சிறப்புக் கட்டுரை!]

"பள்ளத்தில் வீழ்ந்த நம்மைப் பதவி பெறச் செய்தவர்"

ஜெயங்கொண்டம் கலையரசன்

இல்லந்தோறும் பெரியார் கொள்கை மயமே
இருந்திட்டால் நம்மவர்க்கு இல்லை பயமே (இல்)

பள்ளத்தில் வீழ்ந்த நம்மைத் தூக்கி விட்டுப்
பதவி பெற்று வாழ்ந்திடவே வழிவகுத்தார்
வல்லவராய் நாமும் திகழ்ந்திடவே
வகுப்புரிமை என்றதொரு அரண் அமைத்தார் (இல்)

தீண்டாமை ஒழிந்திடவே வைக்கமதிலே
தீவிரப் போர் புரிந்து வாகை அணிந்தார்
ஆண்டான் அடிமை என்ற நிலை மாறி
ஆணுக்குப் பெண்ணிங்குச் சமமென்றார் (இல்)

கலப்பு மண முறையால் சாதி யொழித்தார்
கள்வர் குகைக்கோயில் பக்தி அழித்தார்
விதவை மண முறையால் கைம்பெண்கள்
வேதனைக்கோர் முற்றுப்புள்ளி வைத்திட்டார் (இல்)

பேய்பூதம் பூச் சாண்டி பிசாசு
பித்தர் சொன்ன மோட்சம் நரக மென்ற
நோய் நீங்கப் பகுத்தறிவு சிகிச்சை தந்தார்
நுண்ணறிவு மிக்கவராய் நாம் மாறினோம் (இல்)

புத்தர் போல் ஆரியத்தை எதிர்த்திட்டார்
புதுப்புதுக் கருத்துக்களை உதிர்த் திட்டார்
இத்தரையில் எல்லோரும் சம மென்றார்
இங்கிருந்த நால்வருண முறை வென்றார் (இல்)

"உலகத் தலைவர்" தந்தை பெரியார்

தமிழர்கள் வாழ்வில் இருளைப் போக்கவந்த உதய சூரியன் பெரியாரின் சிலையினைத் திறந்துவைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அவருக்கு சிலையெடுக்கிறோம் என்றால் என்ன அர்த்தம். அவர் தம்முடைய கருத்துக்களால் தமிழர் சமுதாயத்தினை தட்டி எழுப்பியதால்தான்.

அவர் 60 ஆண்டு காலத்திற்கும் மேலாக சுயமரியாதை கருத்துக்களை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார். அதற்காக நாம் அவரை சிலையெடுத்து ஊக்கமூட்டுகிறோம். பல்லக்கில் பவனி எடுக்கிறோம். பாராட்டுகிறோம். இதையெல்லாம் பெரியார் விரும்புவது இல்லை. நாம் இதனால் மட்டும் பெருமை அடைந்துவிடாமல் அவருடைய கனவுகளை நினைவாக்க வேண்டும். அவைகளை நிறைவேற்ற வேண்டும்.

வீரமணி பேசுகையில் இன்று சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில்தான் *1944*-ல் மாநாடு முடிந்து ரெயிலுக்கு ரிக்சாவில் செல்லும்போது பெரியாரைக் காலணியால் தாக்கியதாகவும், அதனை அவர் தமது கைப்பையில் வைத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும் கூறினார். பெரியார் ஏன் அப்படி எடுத்து வைத்துக்கொண்டார் என்றால் அதற்குத் தகுந்த ஜோடி கிடைத்தால் பயன்படுத்தலாம் என்று எடுத்துச்சென்று இருப்பார்.

அவர் எடுத்து சொல்லும் கருத்துக்களை அழுத்தந் திருத்தமாகக் கூறுவார். ஒரு சமயம் கும்பகோணத்தில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது ஒரு பார்ப்பன நண்பர் பெரியாரிடம் மேடைக்கு அருகாமையில் அமர்ந்துகொண்டு கேள்விகளை எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார். அதற்குப் பதில்களை மேடையில் சரமாரியாகவும் அதே சமயம் ஆணித்தரமாகவும் பெரியார் அளித்து வந்தார்.

அந்த நண்பரின் பென்சில் முனை ஒடிந்துபோனதைக் கண்ட பெரியார் தம்முடைய பேனாவை எடுத்துக் கொடுத்து மேலும் மேலும் கேள்விகள் கேட்கச் சொன்னார்.

பெரியார் எதிர்ப்புகளில் வளர்ந்தவர். அதற்கெல்லாம் அஞ்சாதவர்.

1945—46ம் ஆண்டில் பாண்டிச்சேரியில் மாநாடு முடிந்து வரும்போது தாக்கப்பட்டார். அதனைக் கேள்விப்பட்ட அழகிரிசாமி கிரேக்கத்தில் இருந்த சாக்ரட்டிசை அழித்தார்கள். ஆனால் இதுவரை சாக்ரட்டீஸ் கிடைக்கவில்லை. ஆபிரகாம் லிங்கனை அழித்தார்கள். அமெரிக்காவில் இன்றுவரை லிங்கனைப்போல் யாரும் கிடையாது. அதுபோல் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பெரியாரை அழித்துவிட்டால் வேறு பெரியார் கிடைக்கமாட்டார் என்று கூறினார்,

அப்படி கிடைத்திருப்பாரேயானால் இம்மாதிரி வெள்ளமென மக்கள் பெரியார் சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ள மாட்டீர்கள்.

சிலை என்றால் உருவச்சிலை என்றும் பொருள், வில் என்றும் பொருள். பெரியார் என்ற வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள்தான் அண்ணா, அக்கினி அஸ்திரம் பட்டுக்கோட்டை அழகிரிசாமி. நாகாஸ்திரம் சி. பி. சிற்றரசு, என்னை எந்த அஸ்திரம் என்று நீங்களே முடிவு எடுத்துக் கொள்ளுங்கள்.

அம்புகள் என்றால் ஜாதியின் பெயரால், கடவுளின் பெயரால் ஏமாற்றுகிறவர்களின் விலாவினைக் குத்திக் கிழிக்கும் அம்புகள்என்று அர்த்தம். இதிகாச புராணங்களைச் சொல்லி ஏமாற்றுபவர்கள் இடுப்பொடியச் செய்யும் அம்பு என்று அர்த்தம்.

உலகத்திலேயே தமிழர்களை விழிப்பு கொள்ளச் செய்தவருக்கு சிலை எடுப்பதில் என்ன தவறு? அவருக்கு சிலையெடுப்பவர்களுக்கா ஓட்டு எனக்

டாக்டர் கலைஞர்

கேட்டார்கள். கிராமங்களில் பெரியார் தி. மு. க. -வினை ஆதரிப்பது தெரியாமல் இருந்தது. எதிர்க் கட்சியினர் இதனைச் சொல்லவே கிராம மக்கள் பெரியார் ஆதரிக்கும் தி. மு. க.-வுக்குத்தான் எங்கள் ஓட்டு என்று எங்களை ஆதரித்தனர்.

எதிர்க்கட்சியாக நாங்கள் இருந்தபோது மாதவன் சுயமரியாதைக் கல்யாணத்தை சட்டபூர்வமாக ஆக்கவேண்டும் என்றார். அப்போதிருந்த ஆட்சியாளர்கள் முடியாது என்றனர். 1967-ல் அண்ணா தலைமையில் நாங்கள் பொறுப்பேற்றவுடன் அதே மாதவன் இத்தீர்மானத்தை முன்மொழிய அண்ணா வழி மொழிய சட்டமாக்கப்பட்டது.

அப்போதும் அவர்கள் இச்சட்டத்தினை பெரியாருக்குக் காணிக்கை யாக்குவீர்களா எனக் கிண்டல் செய்தனர். ஆனால் அண்ணா அடக்கமாக சட்டமென்ன இந்த ஆட்சியைக்கூட பெரியாருக்கு காணிக்கையாக்குவோம் என்றார்.

இந்தியாவில் மட்டுமல்ல உலகத் தலைவராக மதிக்கக்கூடியவர் பெரியார்.

நான் சென்ற ஆண்டு சிகிச்சைக்காகவும் அமெரிக்க அரசாங்க அழைப்பின் பேரிலும் அமெரிக்கா சென்றபோது, சிக்காக்கோ நகரில் உள்ள கல்லூரி மாணவர்களுடன் உரையாடும் பாக்கியம் கிடைத்தது. அவர்கள் பெரியார் எழுதிய புத்தகங்களை வைத்துக்கொண்டு பெரியாரைப்பற்றி ஆராய்ச்சி செய்வதைக் கண்டேன். கடல் கடந்த நாடுகளில் பெரியாரைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள் என்றால் ஏன் அவரை உலகத் தலைவர் என அழைக்கக் கூடாது.

அவரைப் புகழ்ந்து பேசினால் சிலருக்கு எரிச்சல். அவர் எங்களை ஆதரித்தால் சிலருக்குக் கஷ்டமாக இருக்கிறது. அவர் ஏன் எங்களை ஆதரிக்கக்கூடாது? நாங்கள் என்ன திறமையற்றவர்களா? புத்தியற்றவர்களா? அவர் சொல்லியபடி ஏழை எளிய மக்களுக்காக ஆட்சி செய்கிறோம்.

அவரை வாழ்த்த எங்களுக்கு அருகதை இல்லை. தகுதி இல்லை. இருப்பினும் மழலை மொழியால் தந்தையை வாழ்த்தும் குழந்தைபோல் நாங்கள் அவரை வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்.

[கடலூர் மஞ்சை நகர் திடலில் தந்தை பெரியார் சிலையைத் திறந்துவைத்து, டாக்டர் கலைஞர் ஆற்றிய உரை.]

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

சூர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

“தந்தை பெரியார்” என்று அன்புடன் அழைக்கப்படும் ஈ. வெ. ரா. பெரியார், 1879-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் தேதி ஈரோட்டில் பிறந்தார்.

பெற்றோர்

தந்தை பெயர் வெங்கடப்ப நாயக்கர். தாய் பெயர் சின்னத்தாய் அம்மையார். “முத்தம்மாள்” என்றும் சொல்வார்கள்.

ஒரு அண்ணனும், இரண்டு தங்கைகளும் இவருடன் பிறந்தவர்கள்.

இவருடைய பெற்றோர்கள் ஆரம்பத்தில் மிகவும் ஏழ்மையில் அவதிப்பட்டார்கள். பிறகு, ஒரு பெட்டிக் கடை வைத்து படிப்படியாக முன்னேறினார்கள்.

படிப்பு

6-வது வயதில் ஈரோட்டில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பெரியார் சேர்க்கப்பட்டார். சிறு வயது முதலே சாதி வேறுபாடு கூடாது என்ற கொள்கை கொண்டு இருந்தார்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுது மற்ற சாதி பையன்களுடன் பழகுகிறார் என்பதால் அவரது பெற்றோர்கள் அவர் காலில் விலங்கு மாட்டினார்கள். இதற்கும் அடங்காததால் 10-வது வயதிலேயே அவர் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. பிறகு தந்தைக்கு உதவியாக வியாபாரத்தில் ஈடுபட்டார்.

திருமணம்

19 வயதில் ஈ. வெ. ரா. பெரியாருக்கு திருமணம் நடந்தது. வீட்டில் கடும் எதிர்ப்பையும் சமாளித்து அவர் காதல் திருமணம் செய்துகொண்டார். மனைவி பெயர் நாகம்மாள். பெரியாரின் ஒன்றுவிட்ட மாமன் மகள்.

திடீரென்று வாழ்க்கையில் வெறுப்படைந்த பெரியார், வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், சாமியாராக மாறி ஐதராபாத் சென்றுவிட்டார். அப்பொழுது அவருக்கு வயது 25.

ஐதராபாத்தில் சில நாட்கள் பிச்சை எடுத்து அதன் மூலம் கிடைத்த அரிசியைக் கொண்டு சாப்பிட்டு வந்தார். துறவியாக ஆவதற்காக அவர் காசி சென்றார்.

காசியில் போலிச் சாமியார்களின் “லீலை”களை நேரில் பார்த்தார். கறி சாப்பிடுவதையும் கஞ்சா, மது ஆகியவை குடிப்பதையும் அவர் நேரில் பார்த்து துறவறத்தில் வெறுப்படைந்தார்.

பொதுவாழ்வு

மீண்டும் ஈரோட்டுக்கு திரும்பி வியாபாரத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். அப்போது பொது வாழ்விலும் பங்குகொண்டார். 12 ஆண்டுகள் கவுரவ மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தார்.

1919-ல் ஈரோடு நகரசபைத் தலைவர் ஆனார்.

காங்கிரஸ்

1920-ம் ஆண்டு காங்கிரசில் சேர்ந்தார். கதர் துணியை முதுகில் சுமந்து விற்றார். கள்ளுக்கடை மறியலில் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றார். நாகம்மாளும் ஜெயிலுக்கு போனார்.

கேரளத்தில் உள்ள “வைக்கம்” என்ற இடத்தில், தீண்டாமையை ஒழிக்க போராட்டம் நடத்தினார். வெற்றியும் பெற்றார்.

“வைக்கம் வீரர்” என்று பட்டமும் பெற்றார்.

1924-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

திராவிட கழகம்

1925-ல் காஞ்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில். “காங்கிரசில் சாதி வெறி இருப்பதால் காங்கிரசை ஒழிப்பதே என் வேலை” என்று கூறி காங்கிரசை விட்டு வெளியேறினார்.

அதன் பின் “நீதிக் கட்சி”த் தலைவர் ஆனார். 1944-ல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில், நீதிக் கட்சியை திராவிட கழகமாக மாற்றி அமைத்து அறிவித்தார்.

குழந்தை

நாகம்மாளை திருமணம் செய்துகொண்ட 2-வது ஆண்டில், ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் 5 மாதத்தில் இறந்துவிட்டது. வேறு குழந்தை இல்லை.

பின். 1949-ல் மணியம்மையை திருமணம் செய்து கொண்டார்.

1951-ல் வகுப்பு உரிமைக்காக கிளர்ச்சி நடத்தி இந்திய அரசியல் சட்டத்தை திருத்தச் செய்தார். 1952-ஆகஸ்டு 1-ந் தேதி ரெயில் நிலையங்களில் இந்தி எழுத்து அழிப்பு போராட்டத்தை தொடங்கினார்.

1955-ல் தமிழ்நாடு முழுவதும் 'ராஜாஜி கல்வி திட்டத்தை எதிர்த்து பள்ளிக்கூடங்களில் மறியல் செய்து அந்த கல்வி திட்டத்தை ஒழித்தார்.

1957-ல் ஓட்டல் விளம்பர பலகைகளில் “பிராமணாள்” என்று இருப்பதை அழிக்க போராட்டம் தொடங்கினார். இதனால் ஏராளமான ஓட்டல்களில் பிராமணாள் என்ற சொல் நீங்கியது.

சட்ட எரிப்பு

1957 நவம்பர் மாதம் சாதி ஒழிப்புக்காக சட்ட எரிப்பு போராட்டம் நடத்தினார். சட்டத்தை எரித்ததால் 6 மாதம் சிறையில் தள்ளப்பட்டார்.

வயது அதிகம் ஆகியும், நோய்வாய்பட்டும் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் தன்னுடைய வாழ்நாள் இறுதி வரையிலும் பெரியார், தமிழர்களின் நலனுக்காக ஏராளமான போராட்டங்களை நடத்தி சிறை தண்டனை அனுபவித்தார். மொத்தம் 19 தடவை சிறை சென்று இருக்கிறார்.

போராட்ட அறிவிப்பு

கடந்த 8-ந் தேதி எழும்பூர் பெரியார் திடலில் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தினார். அவர் கலந்து கொண்ட கடைசி அரசியல் நிகழ்ச்சி இதுதான்.

ஜனவரி 26-ந் தேதிக்குள் சாதியை ஒழிக்க அரசியல் சட்டத்தை டெல்லி சர்க்கார் திருத்தாவிட்டால், போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருந்தார்.

வெளிநாடுகள்

எகிப்து, கிரேக்கம், துருக்கி, ரஷியா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இருந்தார்.

மலாயா, பர்மா ஆகிய நாடுகளுக்குச் சென்று திராவிட கழக கொள்கையைப் பரப்பினார்.

பட்டங்கள்

“வெண்தாடி வேந்தர்” “ஈரோட்டு சிங்கம்”, “தமிழர் தந்தை” என்று எல்லாம், ஈ. வெ. ரா. பெரியாருக்கு பட்டங்கள் உண்டு.

கல்லூரி

திருச்சியில் பெரியார் பெயரில் கல்லூரி உள்ளது. மற்றும் பள்ளிக்கூடம், ஆசிரியர் பயிற்சி பள்ளி, அனாதை விடுதி ஆகியவற்றையும் திருச்சியில் அமைத்தார்.

அய்யா...! அய்யா...!!

அநாதைகளாக ஆக்கிவிட்டாயே, அய்யா!!

பொய்யை அழித்த தலைவனே! போய்விட்டாயா? ஆயிரமாயிரம் ஆண்டாய் அடிமைப்பட்டுக் கிடந்தோமே; எழுப்பிய வீரன் நீ எங்களை விட்டுப் போகலாமா?

அண்ணன் மறைந்த துயர், அப்படியே இருக்கும்போது இன்னும் ஒருதுயரை எப்படி அய்யா தாங்கிக் கொள்ளுவோம்!

தூங்கிய இனத்தை விழித்தெழச் செய்து விட்டு, நீமட்டும் நீண்ட துயில் கொள்ளல் நீதிதானா?

அநீதியை எதிர்த்தழித்த உமக்கு இந்த அற்ப-நீதிமட்டும் தெரியாமல் போகலாமா?

பாதிப் பயணத்தில்தானே அய்யா இருக்கிறோம்; மீதிப் பயணத்தையும் மேற்கொண்டு சாதிக்க வேண்டியவைகளைச் சாதிப்பதற்குள் சரித்திரமாகி விட்டீரே, இது சரிதானா அய்யா!!

ஓய்வுதான் வேண்டும் என்றால் உட்கார்ந்து கொண்டே எங்களுக்கு உதவியாக இருக்கலாமே; படுப்பதற்கு என் அய்யா பயணத்தை மேற்கொண்டீர்!!

கொடுமை நெருப்பில் நாங்கள் எரிந்து கொண்டிருக்க நீங்கள் மட்டும் குளிர்ச்சிபெறப் போகலாமா?

"ஏ, ஏ! பகையே! என்ன முறைக்கிறாய்? அதோ எங்கள் அய்யா; அடிபட்டுச் சாகாதே; போ! போ! ஓடிப்போ!" என்று உரக்க முழக்க மிடுவோமே, இனிமேல் எதிர்நிற்கும் பகையை எப்படி அய்யா மிரட்டுவோம்!!

அண்ணன் பிரிந்தார்; அழுதழுது கண்ணீர் முழுவதுமே வற்றிவிட்ட பிறகு, கண்ணே நீராகிவிடுமே; என்ன அய்யா செய்வோம்? எப்படி அய்யா பார்ப்போம்!!

துடிப்பதற்கென்றே இருந்த இதயம் துடித்து ஓய்ந்த பிறகு, துடிப்பதற்கே இதயமில்லையே!!

என்ன அய்யா செய்வோம்!! ஏன் அய்யா பிரிந்தீர்!!

"ஒழிப்போம், அழிப்போம்!! என்று ஓநாய்கள் சுற்றிவரும்போது. உங்கள் கைத்தடியை எங்கள் கண்கள் தேடுமே, அதோ, அந்தக் கைத்தடியே அநாதையாகக் கிடக்கிறதே; ஓநாயை ஓட்டுவார் யார் அய்யா!!

கொடுமைப் பாம்புகள் கொத்தித் தீர்ந்தபோது அய்யாவே! பச்சிலையாக உங்கள் பாதத்தில் வீழ்ந்து! புரளுவோமே; இப்போது...இனிமேல்... யாருடைய பாதத்தில் புரளுவோம்!! பாதத்தை முடக்கிக் கொண்டு படுக்கப் புறப்பட்டீரே! பாம்புகள் கடிக்குமே! பச்சிலைக்கு எங்கே போவோம்?

இதைக் கூடவா அய்யா எண்ணிப் பார்க்கக் கூடாது!! கல் நெஞ்சமய்யா உங்களுக்கு!!

துரத்திவரும் நாயாகத் துயரங்கள் இருந்தபோது கட்டியணைத்துக் காப்பாற்றும் கைகளை மடக்கிக் கொண்டீர்களே, கருணையே இல்லையா!!

காலை அணைத்துக் கொள்ளும் குழந்தைகளை வாரியணைத்துக் கொள்ளும் தாயாக இருந்தீர்களே, தவறு செய்து விட்டீர்களே அய்யா; எம்மைத் தனியாக்கி, சாவின் துணையாகிப் போய் விட்டீரே!!

ஆயிரமாயிரமாக ஆருயிரைத்தருவதற்கு மானமுள்ளவர்கள் இருக்கும்போது, மரணத்தை எங்களிடம் அனுப்பாமல், உங்களிடம் ஏனய்யா வரவிட்டீர்!! இரக்கமில்லாதவராக ஏனய்யா மாறிவிட்டீர்!!

அய்யா என்றழைக்க இனியாருமே இல்லையே; ஏனய்யா இதை எண்ணிப் பார்க்கவில்லை!!

தந்தையென்று சிந்தை குளிர அழைப்பதற்கு இனி எவருமே இல்லாதபோது பிள்ளைகளைக் கதற விட்டுப் பிரிவதற்கு ஏனய்யா துணிந்தீர்கள்!!

வேறொரு பெரியாரை எங்கள் விழிகளுக்குக் காட்டாமல் உங்களை யாரய்யா வேகமாகப் போகச் சொன்னது!!

புராணம் பூரிக்கிறதே, உங்களுக்குப் புரியவில்லையா?

இதிகாசங்களின் கையில் இனிப்பு குவிகிறதே, இதை எண்ணிப் பார்க்க நேரமில்லையா?

சாதிப் பேய் சதிராட்டம் போடுகிறதே; மடமைப் பிசாசு மகிழ்ந்து கூத்தாட்டம் போட்டு குதிக்கிறதே; எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் எங்களைப் பிரியலாமா?

மூடப் பிராணிகள் எல்லாம் முக்கனியோடு எக்களிக்கின்றனவே, எண்ணிப் பார்க்க வில்லையே அய்யா நீங்கள்!!

ஒன்றுமே புரியவில்லையே!

உலகமே இருண்டு கிடக்கிறதே!

பாலைவனத்துச் சோலைக் குயிலாகப் பரதவிக்கின்றோமே!!

அய்யா...!!

அய்யா...!!

எங்களை அநாதைகளாக்கி விட்டுப் போய் விட்டீரே!

தந்தையே!

எங்களினத்துத் தலைவரே!

எங்கள் உயிரே!

எழுச்சித் திருவே!

மனிதனடா நீயென்று எங்களை மலரவைத்தவனே!

நடமாட விட்டவரே!

நம்பிக்கையை ஊட்டியவரே!

எங்களுக்குத் தாயாக இருந்தவனே!

தந்தையாக வாழ்ந்தவனே!

வரமாட்டாய் என்றறிந்தும் வா என்று அழைக்கிறோமே!

போன இடமறிந்தும் தேடித் திரிகிறோமே!!

ஆர்த்தெழுந்த அறிவுப்புயலே! அடக்கம் செய்யப் போகிறோமே!!

அழுகையே அழுமா?

நாங்கள் அழுகிறோம்!!

துயரமே துடிக்குமா?

நாங்கள் துடிக்கிறோம்!!

எரிமலை எரியுமா?

நாங்கள் எரிகிறோம்மா!!

வேறென்ன சொல்வோம்!! வேறென்ன செய்வோம்!;

அய்யா!

அய்யா!!

உங்கள் நெறிவென்று, உங்களைக் காண வருகிறோம்.

அழிக்கவேண்டியதை அழித்து, வளர்க்கவேண்டியதை வளர்த்து வருகிறோம் அய்யா...வாழ்த்துரைக்கத் தயாராக இருங்கள்!! ஃ

அரிமதி தென்னகன்

★ ★ புகழ் மாலை ★ ★

வைக்கம் வீரர்

(1924)

வைக்கத்தில் (1924) தீண்டாமை போராட்டம் எழுந்தது. நாயக்கர் அங்கே சென்று சத்தியாக்கிரம் செய்தார். திருவாங்கூர் அரசாங்கம் அவரைச் சிறைபடுத்தியது. அப்பொழுது யான், 'வைக்கம் வீரர்' என்ற தலைப்பிந்து, பெரியாரின் தியாகத்தை வியந்து வியந்து 'நவசக்தி'யில் எழுதுவேன். 'வைக்கம் வீரர்' என்பது, பெரியாருக்கொரு பட்டமாகவே வழங்கலாயிற்று.

தமிழ்ப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தரம்

ஃ ஃ ஃ

பெரியார் வெற்றி ரகசியம்?

(1927)

அந்தக் காலத்தில் நாங்கள், படித்த கூட்டத்தாரைக் கொண்டு, சீர்திருத்த ஆர்வத்தை நாட்டில் எழுப்பிவிடலாம் என்று நம்பினேம். ஆனல் இராமசாமி நாயக்கரவர்கள், படித்தக் கூட்டத்தாரைப் பற்றிக் கவலைப்படுவதே கிடையாது. என்ன ஆனுலும் சரி, சீர்திருத்தம் மட்டும் கூடவே கூடாது என்று சூள் உரைத்துவிட்ட (படித்த) கூட்டத்தாரிடம், சீர்திருத்தப் பணியாற்றுவதில் ஈ. வெ. ரா. அவர்களுக்கு நம்பிக்கைக் கிடையாது. ஆம்! படிப்பு வாசனை அறியாத பாமர மக்களிடம் தம் முழுச் சக்தியையும் அவர் செலவிட்டுப் பணியாற்றி வருகிருரே, அதிலேதான் அவருடைய வெற்றியின் இரகசியம் அடங்கி இருக்கிறது. பரிதாபத்திற்குரிய வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கும் பாமர மக்களை, அவர்களுடைய நீண்ட உறக்கத்தினின்றும் தட்டி எழுப்புவது; அவர்களுடைய உள்ளத்தில் தம் கருத்து நேரே சென்று பதியக்கூடிய வண்ணம் பேசுவது; எழுதுவது; இவற்றின் தொகுப்புத்தான், நண்பர் இராமசாமி நாயக்கரின் பெருந்தொண்டு.

1815-ஆம் ஆண்டில், ஃபிரெஞ்சு தேசத்தில் 'ரூசோ' என்பவர் அந்நாட்டின் சுயமரியாதையைக் காப்பாற்ற உழைத்தது போல், நம்நாட்டின் சுயமரியாதையைக் காக்க உழைக்கும் நமது நாயக்கர், 'தமிழ் நாட்டின் ரூசோ' ஆவார்.

திரு. சர். ஏ. இராமசாமி முதலியார்

ஃ ஃ ஃ

கற்ரூர் சீற்றம் தணித்தார்

(1948)

சாதி சமயப் பூசலகளையொழித்து, "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கித்" திருவருள் நெறி நின்று ஒழுகுதலாகிய பழந் தமிழ்க் கொள்கையே சைவ நன் மக்கட்குரிய உண்மைக் கொள்கையாயிருந்தும், முப்பத்தைந்தாண்டுகட்குமுன், சொற்பொழிவாலும் நூல்களாலும் யான் அதனை விளக்கிய காலையில், அதனை எதிர்த்தும் என்னைப் பகைத்தும் எனக்குத் தீது செய்தவர்கள் சைவரிற் கற்றவர்களே. அஞ்ஞான்று எனக்கு உதவியாய் நிற்றற்கு எவருமில்லை. பின்னர்ப் பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள், யான் விளக்கிய கொள்கைகளையே மேலுந்தட்பமாய் எடுத்து விளக்கிப் பேசவும் எழுதவுந் துவங்கிய காலந்தொட்டு, ஆரியச் சேர்க்கையால் தமிழ் மொழிக்கும் தமிழர் கோட்பாட்டிற்கும் தமிழரது வாழ்க்கைக்கும் நேர்ந்த குறைபாட்டைத் தமிழர் உணர்வாராயினர். அவரிற் கற்றவரும் என் மேற்கொண்ட சீற்றந் தவிர்வாராயினர். ஆதலாற், பெரியார் இராமசாமி அவர்களின் தமிழ்த் தொண்டைப் பெரிதும் பாராட்டி, அவர்கள் நீடு இனிது வாழ்கவென்று திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

உயர்திரு. மறைமலையடிகளார்

ஃ ஃ ஃ

"பெரியார்" பெயர் பொருத்தம்

(1956)

சமூகத் சீர் திருத்தம் வேண்டி பாடுபடும் எவருக்கும் சமூகத்தில் வரவேற்பிருக்காது; இது நாடறிந்தது. மதத் துறையில் மாறுதல்கள் செய்யப் பாடுபட்ட தலைவர்கள் எத்தகைய துன்பங்களுக்கு ஆளானுர்கள் என்பது சரித்திரம் கூறும் உண்மை. இவைகளுக்கெல்லாம் மேலாக, புரட்சிகரமான ஒரு கருத்தோடு தற்போது பெரும்பான்மையான மக்கள் பின்பற்றக்கூடிய ஒரு மதம் அநீதியை விளைவிக்கிறது; ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கிறது; மனிதனை அடிமையாக்குகிறது; அது நமக்குத் தேவையில்லை என்று கூறி, அம்மதத்தையே ஒழிக்கப் பாடுபடும் ஒரு தலைவருக்கு எத்தகைய உறுதியும் தைரியமும் வேண்டும்? ஒரு மனிதன் சாதாரணமாக, கற்பனை செய்துகூடப் பார்க்க இயலாத நிலை! ஆரம்ப காலத்தில் அவருக்குப் போதிய ஆதரவாளர்கள் இல்லாமலும் கடுமையான எதிர்ப்புகளும், துன்பங்களும் ஏற்பட்டும் அவைகளை தைரியத்துடன் சமாளித்து, கொள்கை உறுதியிலிருந்து வழுவாது, இடைவிடாது பிரசாரம் செய்து, தம்கொள்கைகளைப் பரப்பினுர்; இன்றும் பரப்பிக்கொண்டிருக்கிருர் என்பதை நினைக்கும்போது அவரை, பெரியார் அதாவது சாதாரண மனிதரிலும் மேம்பட்டவர் என்று ஏன் கூறக்கூடாது? சிறுபான்மையான மக்களின் வெறுப்புக்கு ஆளாக நேரிட்ட போதிலும் இன்று பெரும்பான்மையான மக்கள் அவரை, பெரியார் என்று போற்றத்தக்க ஒரு நிலைக்கு; மதித்து மரியாதை செய்யக்கூடிய ஒரு நிலைக்கு உயர்ந்திருக்கிருர். இது பெருமை தரக்கூடிய ஒரு விஷயம்.

திரு. ஜி. டி. நாயுடு

ஃ ஃ ஃ

தனக்கெனவாழா பிறர்க்குரியாளர்

(1939)

"பெரியார் இராமசாமி அவர்கள். திராவிடருக்குப் பொதுவாயும், தமிழருக்குச் சிறப்பாயும், உரிமையும் பெருமையும் உண்டுபண்ண உழைக்கும் பெருந்தலைவர், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போலிப் பெரியார் வரிசையில் சேராதவர். எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணிய முயற்சியுடையார். கிளை, பகை கருதாமல், பொதுநலமொன்றையே பேணித், தம்முள்ளத்தாற் பொய்யாதொழுகும் நேர்மையாளர். புகழும் பழியுமிகுந்து, அச்சமறியா உரனுடைய உள்ளத்தராய் என்றும் ஒன்றுபோல் நின்று, உற்றுரிடத்துக் குறைகாணில் மறையாதுரைத்து, வலியார் மெலியாரை நலியாது எதிர்த்து, எளியவர் தோழராய் போராடும் வீரர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளருள், தலையணி நிலையுடைத் தக்கார். அவரோடு கருத்து வேறுபாடுடையாரும், அவர் நேர்மையும், பகையற்ற உளப்பாங்கும் அஞ்சாமையும் பாராட்டும் தகவுடையார். வேடத்தால் விரகால், கடவுட் பெயரால் மக்களை மருட்டி வாழ்பவர் விரைந்து மறைய மெய்யுரைத்துத், தம் குற்றம் காண்கிற்கும் ஆள்வினையுடையார்."

நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் M.A., B.L.

ஃ ஃ ஃ

விழிப்பு உணர்ச்சி தந்தவர்

பெரியார் அவர்கள் சமயத் துறையில் செய்த கிளர்ச்சிகளின் பயனாக ஒரு விழிப்புணர்ச்சி நாட்டில் வந்திருக்கிறது. சமயத் துறையில்கூட சமுதாய சேவையில் அக்கரை காட்டத்தலைப்பட்டுள்ளனர். இத்துறையில் பெரியார் அவர்கள் செய்த மகத்தான பணிக்கு நம்முடைய நன்றி. இன்றையப் பெரியார் அவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் எல்லோரும் நாமும் கலந்து கொள்கிறோம். எத்தனையோ துறையில் பெரியார் அவர்களுக்கும் நமக்கும் கருத்து ஒற்றுமை, வேற்றுமைகள் உண்டு. இருப்பினும் அவருடைய சமுதாய மறுமலர்ச்சித் திருப்பணியில் ஈடுபட்டுச் செய்த ஒப்பற்ற நற்பணிகளை நாம் மறந்துவிட முடியவில்லை. இப்படிச் சொல்வதினால் சிலர் நம்மீதுகூட வெறுப்புக் கொள்ளலாம். அப்படி வெறுப்பைக் காட்டுபவர்கள் பிரித்து வைப்பதின்மூலம் தன்னலத்தை வளர்த்துக் கொள்பவர்களே ஆவார்கள். வேற்றுமைக்குள்ளும் ஒற்றுமைகாணும் விழுமிய பண்பு நாட்டில் வளரவேண்டும். ஆகவே சாதி ஒழிப்பு இயக்கத் தலைவராக, சமுதாய புனர் நிர்மாண இயக்கத் தந்தையாக விளங்கும் பெரியார் அவர்கள் நீடூழி வாழ்க என் வாழ்த்துகின்றோம்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.

★

வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட் ...	ரூ. 5	ரூ. 355
	ரூ. 10	ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு ...	ரூ. 5	ரூ. 337.50
	ரூ. 10	ரூ. 675.00

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

சிறு சேமிப்புத் துறை,

தமிழ்நாடு அரசு.

பெரியார் மறைவு

திரு. ஈ. வெ. ராமசாமியின் மறைவு நமது காட்சிக்களத்திலிருந்து மிகவும் சர்ச்சைக்குரிய ஒருவரை அகற்றிவிட்டது. திரு. ஈ. வெ. ரா. சமூகக் கேடுகளை எதிர்த்து விடாது போராடிவந்தார்.

அவரது கருத்துக்களையும் அல்லது அவர் தமது இலட்சியத்தை அடைவதற்காகக் கையாண்ட வழிமுறைகளையும் அனைவரும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும்கூட தாம் செய்த அனைத்தையும் அவர் உண்மை விசுவாசத்துடனேயே செய்தார்; தாம் எடுத்துக் கூறிய இலட்சியங்களுக்காக அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். அவர் பிரச்சாரம் செய்த கருத்துக்கள் தமிழ்நாட்டு மக்களிடம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்.

திரு. ஈ. வெ. ரா. தமது பொதுவாழ்வை ஒரு தீவிர காங்கிரஸ்காரராகத் துவக்கினார். 1924-ஆம் ஆண்டில் தீண்டாமையை ஒழிப்பதற்காக அவர் வைக்கம் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதற்காக வைக்கம் வீரர் என்று காங்கிரஸ்காரர்களால் அழைக்கப்பட்டார். அந்தக் கட்சியில் வகுப்புவாதம் இருப்பதாக அவர் உணர்ந்ததும் அதை விட்டே அவர் விலகினார். அதன் பின்னர் அவரது வாழ்க்கையில் அலை அலையாகக் கிளர்ச்சிகளையும் இயக்கங்களையும் அவர் நடத்தினார். சாதியில் மேல் கீழ் என்ற அமைப்பினை உடைய சமூகத்தின் தளைகளை உடைப்பதற்காகவே தாம் இப்போராட்டங்களை நடத்தியதாக அவர் கூறினார்.

கடவுள் நம்பிக்கையுடைய பக்தர்களை அவர் தமது பகுத்தறிவு வாதத்தால் அதிர்ச்சியடைய வைத்தார். அதே வேளையில் அவர் பலரது பாராட்டுதலையும் பெற்றார். இப்படி அவரைப் பாராட்டியவர்கள் அவர்பால் ஈர்க்கப்பட்டவர்கள் என்றாலும் இவர்கள் அவர் பிரச்சாரம் செய்த அனைத்தையும் முழுமையாக நடைமுறையில் கடைப்பிடிக்க முடியாதவர்களாக இருக்கலாம்.

இந்திக்கு எதிராக அவர் நடத்திய இயக்கம் மூலமாக அவர் கணிசமான ஆதரவாளர்களைப் பெற ஏதுவாயிற்று இந்த இலட்சியத்திலும் சாதி ஒழிப்பு முயற்சியிலும் அவர் நாட்டுப் பிரிவினை கேட்கக் கூடிய அளவுக்குப் போனார்.

வரலாறு அவரை ஒரு அரசியல்வாதி என்று மதிப்பிடாது போகலாம் என்றாலும் அரசியல்வாதிகள் அவரையும் அவரது இயக்கங்களையும் பயன்படுத்திக்கொள்ளவே செய்தார்கள். எந்தவொரு பொதுத்தேர்தலிலும் அவர் தமது வாழ்நாளில் போட்டியிடவேயில்லை அவரைத் தந்தை வடிவமாகக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்லாமல், அதற்கு முன்பே தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியினரும் தாங்கள் பெரியார் மூலம் எந்த வகையில் நன்மை பெறலாமோ அந்த வகையில் பயன்படுத்திக்கொண்டார்கள். பயன்படுத்தவில்லை என்று மறுக்க முடியாது.

திரு. ராமசாமி ஒரு போராட்டக்காரர்; இயக்கங்கள் பல நடத்திய உயர் மனோதிடம் படைத்தவர்; சரளமான எழுத்தாளர். அதோடு அவர் மக்களைத் தட்டியெழுப்பும் பேச்சாளர்; கடுமையான முறையில் மக்களைக் கண்டித்துப் பேசுபவர். இதன் காரணமாக எல்லாக் காலங்களிலும் மக்களின் கவனத்தைக் கவர்ந்த ஒரு தலைவராக விளங்கினார்.

— [தி மெயில் 24—12—73]

‘தமிழாசிரியர்’க்காக வாதாடியவர்

தந்தை பெரியார்

“......இன்று ஏதோ தமிழ்ப் புலவர்கள் என்றால் பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், 30—40 வருடத்திற்கு முன்பு தமிழ் வாத்தியார் என்றாலே கேலிக்குரியவராகத்தான் இருப்பார். பசங்கள் முதற்கொண்டு கேலிதான் பண்ணுவார்கள்.

...அரசாங்கத்திலாவது இவர்களுக்கு மரியாதை உண்டா என்றால் அதுவும் கிடையாது. இன்றைக்குக் கொடுப்பதுபோல் அவர்களுக்குச் சம்பளம் அன்று கொடுத்தார்களா? இல்லை.

அந்தக் காலத்தில் ஒரே கல்லூரியில் வேலை செய்யும் தமிழ்ப் பேராசிரியர்க்கு மாதச் சம்பளம் ரூ. 75. அதே கல்லூரியில் வேலை செய்யும் சமஸ்கிருதப் பேராசிரியருக்கு மாதச் சம்பளம் ரூ. 350. தமிழ் படிக்கிற பிள்ளைகள் 200 பேர் இருப்பார்கள். சமஸ்கிருதம் படிக்கிறவர்கள் 20 பேர்கூட இருக்கமாட்டார்கள். இது ஏண்டா இப்படி இருக்கவேணும் என்று யாரும் கேட்டதே இல்லையே! நாங்கள்தான் அன்று தமிழாசிரியர் நிலை உயர்வதற்காகச் சத்தம் போட்டோம். ‘குடிஅரசை’ப் பார்த்தால் தெரியும். காரணம் அக்கால மதிப்பும் நடத்தும் முறையும் அப்படித்தான் இருந்தது. தமிழ் நிலையைப் பற்றிப் பேச ஆள் இல்லை......”

[10—2—1960 அன்று சென்னைச் சட்டக் கல்லூரியில் நடந்த முத்தமிழ் விழாவில் தந்தை பெரியார் ஆற்றிய சிறப்புப் பேருரை.]

பொதுவாழ்வின் தொடக்கத்திலிருந்தே விடுதலைப் போரில் மட்டுமின்றி, சமுதாயச் சீர்திருத்தப் பணிகளிலும் ஈ. வெ. ரா. அக்கறை காட்டினார். பிறகு காங்கிரஸ் தலைவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக, விடுதலை இயக்கத்திலிருந்து விலகி சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் அதிக சிரத்தைகாட்டினார் மக்களிடையே உள்ள சமூக ஏற்றத் தாழ்வுக் கருத்துக்களையும், நடைமுறைகளையும், இழி நிலைகளையும் மாற்றி, சாதி சமயமற்ற ஒரு புது சமுதாயத்தை தோற்றுவிக்க வேண்டும் என்ற ஆர்வம், ரஷிய விஜயத்தை அடுத்து அவரது மனதில் ஆழமாக வேரூன்றியது. அதன் விளைவாக படிப்படியாகத் தோன்றியவை சுயமரியாதை, பகுத்தறிவு, திராவிடக் கழக இயக்கங்கள். அவற்றை அவர் இடையறாத சுறுசுறுப்புடன் கட்டிக் காத்து வளர்த்த விதம் தமது கோட்பாடுகளில் அவருக்கு இருந்த ஆழ்ந்த பிடிப்பைக் காட்டுகிறது.

இயக்கப் பிரசாரம் எவ்வாறு அமைந்திருந்த போதிலும், தம்மிடம் வந்த எல்லோரிடமும் அவர் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொண்டார். அவரது சொந்த நட்புறவுகளும் அதே மாதிரி தனிச் சிறப்புப் படைத்தவை. ராஜாஜியிடம் அவர் கொண்டிருந்த வாழ்நாளைய நட்பு இதற்குச் சான்று, தள்ளாமை மிகுதியாக இருந்தும் ராஜாஜியின் இறுதிச் சடங்குகளில் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சி நட்பின் முறைக்குச் சிகரமாக விளங்கியது. பெரியார் ஒரு எரிமலையாக வாழ்ந்தவர். தனி நாடு கேட்பது போன்ற சில சமயங்களில் சீறி வெடிப்பார். ஆனால் பெரும்பாலும் தமது நம்பிக்கைகளைப் பரப்பும் பிரசாரப் பணிகளிலேயே அமைதியாகக் கழித்தார். எல்லா நிலைகளிலுமே அவர் மக்களைப் பரவலாக ஈர்த்து வந்தார். அவரது சாதனைகளை காலந்தான் சரிவர மதிக்கவல்லது. ஆனால் அவை கணிசமானவை. இரண்டு தலைமுறைகளில் தமிழ் நாட்டில் செல்வாக்குடன் விளங்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவராக திகழ்ந்து வரலாற்றில் இடம் பெற்றுவிட்டார். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

[“தினமணி” 25—12—73]

நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரட்டிப்பாகிட தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி, நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான்

குடும்ப நலத் திட்டம்

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
[illegible] தெரு, [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.